ISSN : 2455-0531

# இனம்

இனம் இனத்தைச் சேரும்!

## பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

இலக்கணம், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், கணினிசார் ஆய்வை இனங்காண!

மலர் : 1 இதழ் : 2, ஆகஸ்ட் 2015 Vol. I Issue 2, August 2015


மொழியியல்

சிறப்பிதழ்

தொகுதி 2 டிசம்பர் – பிப்ரவரி எண் 3

எழுத்துச் சீர்திருத்த மலர்

பதிப்பாசிரியர்கள்

ச. அகத்தியலிங்கம்

செ. வை. சண்முகம்

அனைத்திந்தியத் தமிழ் மொழியியற் கழகத்தின் காலாண்டு இதழ்

1979





உ. ஜோசப் இருதயராஜ் கொடுமுடி சண்முகம்

க. பாலாஜி R. Nithya ந. இராஜேந்திரன்

மு. முனீஸ்மூர்த்தி மதிப்புரை

inam:International Research E Journal Tamil Studies

Inam ISSN : 2455 - 0531

# இனம்

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்
An Internationally Refereed e_ Journal of Tamil Studies

## பதிப்பாசிரியர்

முனைவர் முமுனீஸ்மூர்த்தி.
முனைவர் தசத்தியராஜ்.

## ஆசிரியர்குழு

முனைவர் சிலம்பு நா. செல்வராசு (புதுச்சேரி)
முனைவர் ஆ. மணி (புதுச்சேரி)
முனைவர் க. பாலாஜி (கோவை)
முனைவர் ந. இராஜேந்திரன் (பெருந்துறை)
முனைவர் சி. இரவிசங்கர் (மதுரை)
முனைவர் ப. சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் ச. முத்துச்செல்வம் (கோவை)

## வெளியிடுபவர்

*முனைவர் தசத்தியராஜ்.*
கோவை
*9600370671*
*inameditor@gmail.com*
*www.inamtamil.com*

ஆகஸ்ட் 2015 மலர் : 1 இதழ் : 2
August 2015 Volume I Issue 2

# உள்ளே ...

**கவிஞர் வெள்ளியங்காட்டான் பார்வையில் பிரம்மம்**

*உ.ஜோசப் இருதயராஜ்* 3

**பொறித் தமிழ்**

*கொடுமுடி சண்முகம்* 10

**பெருங்கற்காலத் தமிழ்ச் சமூகமும் ‘தமிழி’ எழுத்துப் பொறிப்புகளும் (தொல்லியல் களஆய்வை முன்வைத்து)**

*முனைவர் க.பாலாஜி* 17

**Nature resister: English & Tamil Poets**

*R.Nithya* 26

**வேந்தர்களின் தலைவிதியை வரையறுத்தவன் மலையமான் திருமுடிக்காரி**

*முனைவர் ந.இராஜேந்திரன்* 29

**சி.வை.தா.வுக்கான அடையாளம் : செய்தனவும் செய்ய வேண்டுவனவும்**

*மு.முனீஸ்மூர்த்தி* 37

**இலக்கணமறியாக் கவிதை - நூல்மதிப்புரை**

*முனைவர் மு.ஐயப்பன்* 42

# வேந்தர்களின் தலைவிதியை வரையறுத்தவன் மலையமான் திருமுடிக்காரி



*முனைவர் ந.இராஜேந்திரன்*
*தமிழ் - உதவிப்பேராசிரியர்*
*மகாராஜா இருபாலர் கலை அறிவியல் கல்லூரி*
*பெருந்துறை - 638 052.*

முதுகுடிமன்னர்களை விடச் சற்று மேலான நிலையில் இயற்கை வளம் சார்ந்த மலைப்பகுதிளை ஆட்சியெல்லையாகக் கொண்டு அரசாண்டவர்கள்தான் குறுநில மன்னர்கள். இக்குறுநில மன்னர்களுள் குறிப்பிடத்தகுந்தவன் கடையெழுவள்ளல்களில் ஒருவனான மலையமான் திருமுடிக்காரி. இவன் வேந்தர்களுக்கிடையே நிகழும் போரில் வெற்றி, தோல்வியை நிர்ணயிக்கும் பேராற்றல் வாய்ந்தவனாக விளங்கினான் என்பதை, சங்க இலக்கியப் பதிவுகளின்வழி அடையாளப்படுத்தும் விதமாக இக்கட்டுரை அமைகிறது.

***மலையமான் திருமுடிக்காரி***

தென்னார்க்காடு மாவட்டத் திருக்கோவலூர்க்கு மேற்கே பெண்ணையாற்றின் தென்கரைப் பகுதியும் தென்பகுதியும் பண்டை நாளில் மலாடு என்ற பெயரில் வழங்கப்பெற்று வந்தது. அதற்குக் கோவலூரே தலைநகர். அக்கோவலூரிலிருந்து ஆட்சி புரிந்தவனே மலையமான் திருமுடிக்காரி.

> இம்மலையமான் என்ற சொல் சேர அரசரைக்குறிக்க அமைந்தது. மலைநாடுடைமை பற்றி அவர்களுக்கு வழங்கிய அப்பெயர் காலப்போக்கில் சிறு, சிறு மலைகளையுடைய நாட்டுப்பகுதியை ஆண்ட குறுநில மன்னர்களுக்கு வழங்கலாயிற்று

என்பார் இரா. கிருஷ்ணமூர்த்தி (2011-1).

***மலையமான் குறித்த சங்க இலக்கியப் பதிவுகள்***

தொல்தமிழர்களின் வாழ்வியல் கருவூலமாகக் கருதப்பெறும் சங்க இலக்கியத்தில் குறுநில மன்னனான மலையமான் திருமுடிக்காரி குறித்து 18 பதிவுகள் ஆங்காங்கே காணக்கிடைக்கின்றன. அவை பின்வருமாறு:

| *மலையமான் திருமுடிக்காரி குறித்த பதிவுகள் - 18* | |
|---|---|
| நற்றிணை - 5 | 77:1 - மலையமா, 100:9 - மலையன், 170:6-7 - மலையனது, 291:7-9 - முள்ளூர் மன்னன், 320:5-6 - காரி |
| குறுந்தொகை - 2 | 198:5-6- மலையன், 312:1-2- மலையர் |
| அகநானூறு -2 | 35:14-16- காரி, 209:12-16 காரி, |
| புறநானூறு - 8 | 121:3-4 மாவன் தோன்றல், 122:1-2 காரி, 123:2-3 |

| | |
|---|---|
| | மலையன்,124:4-5 - மலையற், 125:12-15 மலையன், 126:7-8 - முள்ளூர் பொருந, 158:5-6 - காரி, 174:13 -20 - முள்ளூர் |
| சிறுபாணாற்றுப்படை -1 | 110 -111: காரி |

மேற்குறிப்பிட்ட மலையமான் பற்றிய 18 பதிவுகளையும் இருபெரும் பிரிவாகப் பிரித்து ஆராயப்பெற்றுள்ளது.

I. புறநா.174:12-13இல் பதிவு செய்யப்பெற்றுள்ள ‘நும்முன்’ தந்தையா? இளவலா? என ஆராய்தல்.

II. மலையமான் வேந்தர்களுக்கு அடங்கிய குறுநில மன்னனா? அல்லது வேந்தர்களின் தலையெழுத்தை வரையறுத்த வல்லவனா? என ஆராய்தல்.

*I. ‘நும்முன்’ தந்தையா? இளவலா?*

எள்அறு சிறப்பின் முள்ளூர் மீமிசை,
……… ……… ……… ………
சுரும்பார் கண்ணி, பெரும்பெயர் நும்முன்
ஈண்டுச்செய் நல்வினை ஆண்டுச்சென்று உணீஇயர்,
உயர்ந்தோர் உலகத்துப் பெயர்ந்தனன் ஆகலின் (புறநா.174:13-20)

என்ற அடிகளில் உள்ளூர் நும்முன் எனும் சொல்லிற்கு இரா.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இளவல் என்று குறிப்பிடுவதே பொருத்தமாக அமையும். தந்தையைக் குறிக்க ‘நுந்தை’யே வந்திருக்க வேண்டும் (2011-6) என விளக்கம் அளிக்கிறார். ஆனால் உரையாசிரியர்கள் அனைவரும் தந்தை என்றே விளக்கம் தருகின்றனர். அவை பின்வருமாறு:

வரைமுழஞ்சில் வாழும் புலியையெழுதப்பட்ட லாஞ்சினையையுடைய கோட்டையையும் விளங்குதலையுடைய அணிகலத்தினையையும் வண்டார்க்கப் பட்ட கண்ணியையும் பெரிய புகழினையுமுடைய நுன்முன்னோனாகிய தந்தை

என விளக்கம் தருகின்றது உ.வே.சா. பதிப்பித்த பழையவுரை (1956.325).

வரைமுழைஞ்சில் வாழும் புலியை எழுதப்பட்ட லாஞ்சினையை உடைய அணிகலத்தினையையும் வண்டார்க்கப்பட்ட கண்ணியையும் பெரிய புகழினையுமுடைய நுன்முன்னோனாகிய தந்தை

என்கிறார் ஔவை.சு. துரைசாமிப்பிள்ளை (2002.377-378).

மலைக்குகையில் வாழும் புலியைப்பொறித்த லாஞ்சனையையுடைய (அடையாளமுத்திரை) கோட்டையையும் சுடர்விடுகின்ற அணிகலத்தினையும்

வண்டுமொய்க்கும் மாலையினையும் பெரும் புகழினையும் உடையவன் நுன்முன்னோன் ஆகிய தந்தை

என உரைதருகின்றார் கு.வெ.பாலசுப்பிரமணியன் (2004.421).

மலைக்குகையிலே வாழும் புலியுருவம் எழுதப்பட்ட பொறியமைந்த கோட்டையையும் ஒளிவிளங்கும் அணிகலன்களையும் வண்டுகள் மொய்த்து ஒலிக்கும் முடிமாலையையும் பெரும் புகழையுமுடைய நுன்னோனாகிய தந்தை

என விளக்கம் தருகின்றார் வ.குருநாதன் (2003.320).

புலிலாஞ்சினைப் பொறித்த கோட்டையையும் ஒளிவிடும் அணிகலன்களையும் வண்டுகள் மொய்க்கும் மாலையையும் உடைய நின்முன்னோனாகிய தந்தை

என்கின்றார் இரா.இளங்குமரன் (2003.303).

மேற்சுட்டிய சான்றுகளைப் பார்க்கும்போது 'நும்முன்' என்னும் சொல்லிற்கு அனைத்து உரையாசிரியர்களுமே 'தந்தை' என்றே பொருள் கொள்கின்றனர். இக்கருத்துக்கு வலிமை சேர்க்கும் விதமாக பதிற்றுப்பத்தில் ஒரு சான்று கிட்டியுள்ளது.

முன்திணை முதல்வர் போல, நின்றுநீ
கெடாஅ நல்இசை நிலைஇத்
தவாஅ லியரோஇவ் உலகமோடு உடனே (பதிற்.14:20-22)

என்ற இவ்வடிகள், உனது குடியில் தோன்றிய முன்னோர்கள், பொன் அணிகளையுடைய ஆணைச் சக்கரத்தால், கடல்சூழ்ந்த இவ்வுலகில், நாவலம் பொழில் முழுவதையும் நிலைத்த புகழோடு ஆண்டு வந்தனர். அவர்களைப்போல நீயும் ஒழுகி, அழியாத நல்ல புகழை நிலைபெறச் செய்து, கேடில்லாமல் உலகத்தோடு வாழ்வாயாக என்று இமையவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க் கண்ணனார் வாழ்த்துகிறார். இங்கு, இமையவரம்பனின் முன்னோன் என்பது அவனுக்கு முன்னோனான தந்தை உதியஞ்சேரலாதனையே குறிக்கிறது. இதே போல் புறநானூற்றில் பதிவு செய்யப்பெற்றுள்ள நும்முன் எனும் சொல் மலையமானின் தந்தையையே குறிக்கும் என்பது இக்கட்டுரையின் முடிபாக அமைகிறது.

*II. மலையமான் வேந்தர்களுக்கு அடங்கிய குறுநில மன்னனா? அல்லது வேந்தர்களின் தலையெழுத்தை வரையறுத்த வல்லவனா?*

***நற்றிணை***

நற்றிணையில் மலையமான் திருமுடிக்காரி குறித்துக் கபிலரால் மூன்று பதிவும் பரணரால் ஒரு பதிவும் புலவர் பெயர் இல்லா ஒரு பதிவும் இடம்பெற்றுள்ளன.

- 77:1 யானைமீது ஏறிச்செல்பவன் மலையமான்.
- 100:9 ஊரின் எல்லையில் பல ஆநிரைகளை விற்போரை வென்று செலுத்திக்கொண்டு வருகின்றவனும் இரவலர்களுக்குத் தேரைப் பரிசாகக் கொடுக்கும் வள்ளல் தன்மை உடையவனுமாகிய மலையமான்.

- 170:6-7 முள்ளூர்ப் போர்க்களத்தில் பலருடன் போருக்குச் சென்று தன் ஒப்பற்ற வாளை எடுத்த மலையனது ஆற்றலுக்கு அஞ்சி ஆரியப்படை ஓடியது.
- 291:7-9 இரவுப் பொழுதில் குதிரை மீது ஏறிச் சென்று பசுக்கூட்டங்களைக் கொணர்ந்து வரக்கூடியவன் முள்ளூர் மன்னனாகிய மலையமான் திருமுடிக்காரி. இவன்முன் எவராலும் போர்க்களத்தில் எதிர்த்து நிற்க இயலாது.
- 320:5-6 கொல்லிமலைக்குத் தலைவனாகிய வல்வில் ஓரியைக் கொன்றவன் மலையமான் திருமுடிக்காரி.

மேற்சுட்டிய ஐந்து பதிவுகளில் நான்கு பதிவுகள் மலையமானின் வீரம் குறித்துப் பேசுகின்றன.

***குறுந்தொகை***

குறுந்தொகையில் கபிலர் மலையமான் பற்றி இரு பதிவுகளைப் பதிவு செய்துள்ளார்.

- 198:5-6 மலையமான் திருமுடிக்காரி என்ற வள்ளலின் முள்ளூர்க் காட்டில் சந்தனம் மணக்கும்.
- 312:1-2 பகைவர் போர் செய்யுமிடத்து ஒருவருக்கு வலிமையான துணையாகச் செல்லக் கூடியவன் மலையமான் திருமுடிக்காரி.

மேற்சுட்டிய இரண்டு பதிவுகளில் ஒரு பதிவு மலையமானின் வீரத்தினைப் பறை சாட்டுகின்றது.

***அகநானூறு***

அகநானூற்றில் மலையமான் பற்றி அம்மூவனார் ஒரு பாடலும் கல்லாடனார் ஒரு பாடலும் பாடியுள்ளனர்.

- ✓ 35:14-16 திருக்கோவலூரின் அரசன் மலையமான் திருமுடிக்காரி.
- ✓ 209:12-16 முள்ளூர் மன்னனும் சிவந்த வேல் ஏந்தியவனும் வீரவளை அணிந்தவனும் ஆகிய மலையமான் திருமுடிக்காரி வல்லாண்மை கொண்ட மாயப் புகழையுடைய ஓரியைக் கொன்று சேர மன்னனுக்குக் கொல்லி மலையை மீட்டுக்கொடுத்தான்.

மேற்சுட்டிய இரு பதிவுகளும் மலையமானின் வீரச் சிறப்பினை எடுத்துரைப்பதாகப் பதிவு செய்யப்பெற்றுள்ளன.

***புறநானூறு***

புறநானூற்றில் மலையமான் பற்றிக் கபிலர் நான்கு பதிவுகளையும், மாறோக்கத்து நப்பசலையார் இரண்டு பதிவுகளையும், பெருஞ்சாத்தனார் ஒரு பதிவினையும், பெருஞ்சித்திரனார் ஒரு பதிவினையும் தந்துள்ளனர். அப்பதிவுகள் வருமாறு:

- ❖ 121:3-4 மிகுதியான வளத்தை உடைய காரியே நீ புலவர்களின் தகுதியறிந்து போற்றுவாய்.

- 122:1-2 வீரக்கழல் அணிந்த காரியை வெற்றிமிக்க படையையும் உடைய மூவேந்தர்களுள் ஒருவன் எனக்குப் படைத்துணை ஆவாயாக எனக் கேட்டுள்ளான்.
- 123:2-3 குறையாத புகழுடைய மலையமான் பரிசாக பல தேர்களை வழங்கியவன்.
- 124:4-5 மலையமானைப் பாடிச்செல்வோர் நாள் அல்லாத நாளில் சென்றாலும் சகுனப் பறவைகள் தடுத்தாலும் பொருள் பெறுவோர் பரிசு பெறாமல் திரும்பமாட்டார்.
- 125:14-15 மலையமான் உதவிக்கு வந்ததால் வெற்றி பெற்றோர் உன்னால் வெற்றி பெற்றோம் என்றும் தோல்வி அடைந்தவர்கள் உன்னால் தோல்வி அடைந்தோம் என்றும் இருதிறத்தாரும் பேசும் அளவிற்கு வலிமை பொருந்தியவன் மலையமான்.
- 126:7-8 புலவர்களுக்கெல்லாம் தலைமைப் புலவனாக விளங்கும் கபிலரார் மலையமானின் கொடைப்பண்பையும் வீரத் தன்மையையும் புகழ்ந்து பாடியுள்ளார் என மாறோக்கத்து நப்பசலையார் பதிவு செய்துள்ளார்.
- 158:5-6 காரி என்னும் பெயருடையக் குதிரையைச் செலுத்திப் பெரிய போர்களில் வெற்றி கொண்டவன் மலையமான் திருமுடிக்காரி.
- 174:10-13 கபிலரால் பாடப்பட்டவன் போரை விரும்பி வந்த பகைவரைப் புறங்காட்டி ஓடச் செய்பவன்.

*சிறுபாணாற்றுப்படை*

சிறுபாணாற்றுப்படையில் காரி பற்றி ஒரு பதிவு உள்ளது. அது 110-111 கடையேழு வள்ளல்களில் ஒருவனாகக் கருதப்பட்ட ஓரிக்குதிரை ஓரியோடு, காரிக்குதிரைக் காரியாகிய மலையமான் போர் செய்ய நேரிட்டது என்பதாகும்.

மேற்குறித்த 18 பதிவுகளை நோக்குங்கால் மலையமான் திருமுடிக்காரியின் கொடைப்பண்பைக் காட்டிலும் வீரத்தன்மையே பெருமையாகப் பேசப்பட்டுள்ளது. அதற்குக் காரணம் தமிழகத்தை ஆண்ட பெருமைக்குரிய மூவேந்தர்களுள் சேரனும் சோழனும் மலையமானிடம் உதவிபெற விரும்பியுள்ளனர் என்பதுதான்.

மூவருள் ஒருவன் துப்பாகியர் என
ஏத்தினர் தரூஉம் கூழே நும்புடி (புறநா.122:13-14)

என்ற கபிலர் பாடிய பாடலடிகள் மூலம் மலையமான் திருமுடிக்காரியிடம் உதவியைப்பெற வேந்தர்கள் தூது அனுப்பியுள்ளனர் என்பது புலனாகிறது. ஆக மலையமான் திருமுடிக்காரி வேந்தர்களைக் காட்டிலும் வலிமையில் மிக்கு இருந்திருக்கிறான் என்பது தெள்ளத் தெளிவாகிறது. மேலும், வலிமையுடைய வேலையுடைய மலையமான் மட்டும் உதவிக்கு வாராமல் இருந்திருந்தால் சோழன்

இராசசூய வேட்ட பெருநற்கிள்ளியை எளிமையாக வென்றிருக்கலாம் என, தோல்வியடைந்த சேரன் மாந்தரஞ்சேரல் இரும்பொறை கூறியுள்ளான் என்பதை,

கழல்அணிப் பொலிந்த சேவடி நிலம்கவர்பு
விரைந்துவந்து சமம்தாங்கிய
வல்வேல் மலையன் அல்லன் ஆயின்
நல்அமர் கடத்தல் எளிதுமன் நமக்கு (புறநா.125:12-15)

எனும் அடிகள் சான்று பகர்கின்றன. இப்பாடலின்வழிச் சேரனின் தோல்விக்கும் சோழனின் வெற்றிக்கும் குறுநில மன்னனான மலையமான் திருமுடிக்காரியே காரணம் என்கிறார் வடமவண்ணக்கன் பெருஞ்சாத்தனார்.

### அகநானூற்றுப் பதிவு

சிவந்த வேலையுடைய முள்ளூர் மன்னனாகிய மலையமான் திருமுடிக்காரி கடையேழு வள்ளல்களில் ஒருவனான வள்ளாண்மை கொண்ட ஓரியைக் கொன்று அவன் ஆண்ட கொல்லி மலையை வேந்தர்களின் ஒருவனான சேர மன்னனுக்கு மீட்டுக் கொடுத்திருக்கின்றான் என்பதை,

முள்ளூர் மன்னன் கழல்தொடிக் காரி
செல்லா நல்இசை நிறுத்த வல்வில்
ஓரிக் கொன்று சேரலர்க்கு ஈந்த
செவ்வோர்ப் பலவின் பயம்கெழு கொல்லி (அகநா.209:12-15)

எனும் அடிகள் தெளிவுபடுத்துகின்றன. இப்பாடலின்வழிக் கொல்லிமலை முன்னொரு காலத்தில் சேரர்க்குரிய பகுதியாக இருந்திருக்கிறது. பின்பு அக்கொல்லிமலை வலிமையின் பொருட்டு ஓரியின் வசம் ஆளப்பட்டு வந்தது. வில் வித்தையில் தலைசிறந்தவனாக விளங்கியதால் இவனை வல்வில்ஓரி என்று அழைத்தனர். இவனின் வில்லாற்றலை எதிர்த்து நின்று போரிட்டு மீட்கமுடியாத சேரர், மலையமான் திருமுடிக்காரியின் உதவியைப் பெற்று அக்கொல்லி மலையை மீட்டுக் கொண்டனர் என்பது மேற்குறித்த அகநானூற்றுச் சான்றின்வழிப் புலனாகிறது.

மேற்குறித்த பதிவுகளை ஆராயும் போது மலையமான் திருமுடிக்காரி வேந்தர்களைக் காட்டிலும் மிகுந்த வலிமை உடையவனாக இருந்திருக்கின்றான் என்பதை அறியமுடிகிறது. இக்கருத்திற்கு உரையாசிரியர்களின் விளக்கமும் வலுசேர்க்கிறது.

இலக்கண உரையாசிரியர் சங்கர நமச்சிவாயர் உரையில் சோழநாடு என்பதைச் சோணாடு என்றும் பாண்டியநாடு என்பதைப் பாண்டிநாடு என்றும் கூறுவதைப் போல் மலையமான் நாடு என்பது மலாடு என்று மருவி வழங்கும் வழக்கத்தைக் குறிப்பிடுகின்றார். இதன்வழி மலையமான் நாடு வேந்தர்களுடைய நாட்டிற்கு

இணையான நாடு என்பதைத் தெளியலாம். மேலும், இவ்இலக்கணச் சான்று மட்டுமின்றி நாணயவியல் சான்றும் வழிமொழிகிறது.

இதுவரை மலையமான் என்ற பெயருள்ள நாணயங்கள் மூன்று கிட்டியுள்ளன. இவற்றில் இரண்டு நாணயங்கள் திருக்கோவலூரில் கிட்டியவை. மூன்றாவது நாணயம் புதுதில்லியிலுள்ள தேசிய அருங்காட்சியகத்திலுள்ளதாகும். அந்த நாணயத்தை அவர்கள் எங்கிருந்து பெற்றனர் என்பதை அறிய முடியவில்லை. இந்த மூன்று நாணயங்களில் இரண்டில் ஐந்து எழுத்துக்கள் நன்கு அச்சாகியுள்ளன என்கிறார் இரா.கிருஷ்ணமூர்த்தி (2011-8).






இப்படம் இரா.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் சங்ககால மலையமான் நாணயங்கள் எனும் நூலில் இருந்து எடுக்கப்பெற்றது

இப்படத்திலுள்ள நாணயங்களைப் பார்க்கும்போது மூவேந்தர்கள் தங்களது பொருளாதாரச் செல்வாக்கினை நிலைநிறுத்துவதற்கும் பண்பட்ட வேந்தன் என்பதை அடையாளப்படுத்துவதற்கும் வெளியிட்ட நாணயங்களைப் போல் மலையமானின் நாணயங்களும் காட்சியளிக்கிறன. ஆகவே மலையமான் திருமுடிக்காரி வேந்தர்களைக் காட்டிலும் வீரத்திலும் ஈரத்திலும் பண்பிலும் பொருளாதாரச் செல்வாக்கிலும் மிக்கு இருந்ததோடு மட்டுமில்லாமல் வேந்தர்களின் வெற்றி, தோல்வி என்ற தலைவிதியை வரையறுப்பவனாக இருந்திருக்கின்றான் என்பது இக்கட்டுரையின் மூலம் உறுதியாகின்றது.

## உதவிய நூல்கள்

1. இராகவய்யங்கார் ரா., தமிழகக் குறுநில வேந்தர்கள், 2009.
2. இளங்குமரன் இரா., புறநானூறு மூலமும் உரையும், 2003.
3. கிருஷ்ணமூர்த்தி இரா., சங்ககால மலையமான் நாணயங்கள், 2011.
4. குருநாதன் வ., புறநானூறு மூலமும் உரையும், 2003
5. சங்கர நமச்சிவாயர் (உ.ஆ.), நன்னூல் நூ.267.
6. சாமிநாதையர் உ.வே(ப.ஆ.), புறநானூறு மூலமும் பழையவுரையும், 1956.

7. சுப்பிரமணியன் ச.வே., சங்க இலக்கியம், எட்டுத்தொகை மூலமும் தெளிவுரையும், தொகுதி -1, 2010.
8. சுப்பிரமணியன் ச.வே., சங்க இலக்கியம், எட்டுத்தொகை மூலமும் தெளிவுரையும், தொகுதி -3, 2010.
9. செயபால் இரா. (உ.ஆ.), அகநானூறு மூலமும் உரையும், 2004.
10. துரைசாமிப்பிள்ளை ஔவை.சு., புறநானூறு மூலமும் உரையும், 2003
11. நாகராசன் வி.(உ.ஆ.), குறுந்தொகை மூலமும் உரையும், 2004.
12. பரிமணம் அ.மா., பதிற்றுப்பத்து, 2003
13. பாலசுப்பிரமணியன் கு.வெ.(உ.ஆ.), நற்றிணை மூலமும் உரையும், 2004.
14. பாலசுப்பிரமணியன் கு.வெ.(உ.ஆ.), புறநானூறு மூலமும் உரையும், 2004.
15. மாதையன் பெ., சங்ககால இனக்குழுச் சமுதாயமும் அரசு உருவாக்கமும், 2004.